# சங்கச் செவ்வியல் அழகியலும் செவ்வியல் நூற்றொகையில் முத்தொள்ளாயிரச்சேர்க்கையும்

பேரா.தெ.வெற்றிச்செல்வன்,

*அயலகத்தமிழியல் துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம்.*

**ஆய்வுச்சுருக்கம்:**

அழகியல் அடிப்படையில்சங்கச்செவ்வியல் நூற்றொகையில் முத்தொள்ளாயிரம்சேர்க்கப்பட்டது குறித்து ஆய்வுசெய்து, தர்க்க நியாயங்களுடனான மெய்மைகளை முன்வைத்து, இங்கு கட்டுரைக்கப்படுகிறது.

**திறவுச்சொற்கள்:**

அழகியல், நூற்றொகை,அவைதீகம்,வரலாற்றுமொழியியல்.

Synopsis :

The Sangam Classics is familiarly known for its aestheticstructure. But the Muththollayiram is entirely differs from the main stream of Sangam Classics. This research article justifies how Muththollayiram is one among the classical Tamil Literature irrespective of its logical context.

Keywords :

Aesthetics , Book Index, Non spiritual, Historical Linguistics

**அழகியலும் செவ்வியலும்**

பொதுவாக அழகியல் என்பது,எளிய பார்வையில் அழகு பற்றியது என்று எண்ணுவதற்கு வாய்ப்பிருக்கிறது. அது கோட்பாடு பற்றியது. மார்க்ஸிய அழகியல்,திராவிட அழகியல்,கருப்பர் அழகியல், பெண்ணிய அழகியல், தலித்திய அழகியல் எனப் பல அழகியல் கோட்பாடுகளை, நாம் அவதானிக்கிறோம். மார்க்சிய அழகியல் பற்றி எழுத வந்த ஆவ்னர்சிஸ், அழகியல்என்பது, அழகுபற்றிய பார்வைஅல்ல. படைப்பாக்கங்களைக்கோட்பாட்டு ரீதியில் புரிந்துகொள்வதற்கான முயற்சி என்பார்.

அழகு என்பது, மூடுமந்திரமன்று ; ஏனெனில் அந்த மாயமான் அறிவுத்தடத்தில் அகப்பட்டுக்கொண்டது என்கிறார், சபா ஜெயராசா. படைப்பாளிக்கும் நுகர்வோருக்கும் இடையே

செயல்படும் இத்தகு அழகியல் கோட்பாடு , படைப்பின் உள்ளீட்டு நிலைப்பாட்டை, உத்தித் தொழிற்பாட்டை,சமூகப்பண்பாட்டு அரசியல் பின்புலத்தை முன்னிறுத்தி இயங்குகிறது.

படைப்பு அனுபவத்தை முகிழ்த்தெழச்செய்யும் உளநிலை, தூண்டல்-துலங்கல், மனவெழுச்சி உளப்பாங்கு முதலியவற்றை ஆய்வுசெய்வது அழகியல் என்று மேலும் துலக்குகிறார்,ஜெயராசா.

**செவ்வியல் நூற்றொகையாக்கம்**

தொல்காப்பியம் தொடங்கி, முத்தொள்ளாயிரம் உட்பட 41 நூல்களை செவ்வியல்தமிழ் என நூற்றொகையாக்கம் செய்யப்பட்டிருக்கிறது.தமிழ்ச்செவ்வியல் அழகியல்,திணைக்கோட்பாட்டுப் பின்புலத்தை அடிப்படையாகக்கொண்டு அமையப்பெற்றது. அகத்திணையாகவும் புறத்திணையாகவும் காதலை, வீரத்தை, இயற்கையை, கொடையை, தறுகண்மையைப் பொருண்மைகளாகக் கொண்டது. அவைதீகத்தையும் இனக்குழுச்சமூகம் கரைந்து அரசுருவாக்க வடிவெடுக்கும் காலகட்டத்தில் புலப்படுத்தப்படும் சமயம்சாரா வாழ்வையும் சங்கச் செவ்வியல் படைப்புகளில் காண இயலும்.

ஆனால், செவ்வியல்நூற்றொகைஆக்கங்களின்காலகட்டங்களுக்கு இடையேயான இடைவெளி பாரதூரமாகவும் வரையறுக்கச் சிக்கலாகவும்உணரப்படுகிறது. தர்க்கப் பூர்வமான விவாதங்களுக்கு வெளிச்சமூட்டும் தேவை மேலதிகமாக உணரப்படுவதாகவும் விரிவுபெறுகிறது.

செவ்வியல் நூற்றொகைப் பட்டியலில் இடம்பெற்றுள்ள பிற்கால ஆக்கங்களில்,அவைதீகமும் சமயச்சார்பற்ற நிலையும் மங்கியும், மொழிதல் சார்ந்தும், இனக்குழூப் பண்புகள் குலைந்து அதீதத் தனிமனித வழிபாட்டுணர்வு மேலோங்கியும் இப்படிப் பல்வேறு நிலைகளில் ஊடாடியதன்பாற்பட்டு சங்கத் தமிழ்ச்செவ்வியலின் தனித்துவம் நீர்த்திருப்பதைக்காணமுடியும்.

வையாபுரிப்பிள்ளை பத்துப்பாட்டில் இடம்பெறும் திருமுருகாற்றுப்படை, பரிபாடல் இரண்டும் காலத்தால் பிற்பட்டவை என்பதைச் சொன்னபோது, “அவர் வக்கீல் அப்படித்தான் பொய்பேசுவார்” என்று, போகிறபோக்கில் மட்டையடியாக மறுத்த மிகமூத்த தமிழறிஞரை (நாகரிகம் கருதி பெயர் தவிர்க்கப்படுகிறது) என்னவென்பது?விமர்சனத்துக்காக, வையாபுரியாரைத் தமிழ்த்துரோகி என்று இழித்தும் பழித்தும் பேசுவதைசிலர்ஏற்றிப்போற்றி வந்ததென்பது,வருந்தத்தக்கது. அண்மையில் மறைந்த அறிவியல் தமிழ் ஆளுமை, பேராசிரியர்இராமசுந்தரம், “நானும் ஒரு தமிழ்த் துரோகிதான்”(தமிழ்த்துரோகி என மட்டம் தட்டப்பட்ட வையாபுரிப்பிள்ளை பற்றி ஆய்வு செய்ததால்) என்று சுய எள்ளல் செய்துகொண்டதைப் பலரும் நினைவுகூர்வர்.

எனவே,காய்தல் உவத்தல் இன்றி தொடர்ந்துகால ஆராய்ச்சியை முன்னெடுக்க வேண்டியதன் தேவை மேலெழுந்திருக்கிறது. விமர்சனத்துக்கும் தர்க்கத்துக்கும் நெகிழ்ந்து கொடுக்காத கெட்டிதட்டிய இறுகல் நிலையும், அறிவியல் மனப்பான்மையின் கூர்மையின்மையும்ஒரு சமூகத்தின் பின்னடைவுக்குப் பெருங்காரணம்ஆகிவிடும். கூர்ந்தாய்வுக்கு உட்படுத்தாமல் சிவனே என்று இருந்துவிடுதல் முற்போக்குப்பாய்ச்சலை முடக்கிவிடும். சிவபெருமானும் முருகப்பெருமானும் தமிழ் வளர்த்த சமயச்சார்பை விட்டுவிட்டு, அறிவியல் மனப்பான்மையை ஏந்திக்கொள்ளப் பிற்போக்குத் தமிழ்மனம் தயங்கி நிற்கிறது.இறையனார் களவியல்,இந்த வரிசையில் வைத்து எண்ணத்தக்கது.

மொழியாடல்களைக் கருத்தில்கொண்டு, காலகட்டங்களை வரையறுக்கும் ஆய்வில்வரலாற்றுமொழியியலும்(HistoricalLinguistics)நல்லபங்களிப்பைச்செய்யஇயலும்என்கிறநம்பிக்கை இருக்கிறது. வரையறைகளைத் துலக்கப்படுத்தி,மறுகட்டமைப்பாக்கம் செய்ய,ஆய்வுலகத்தின் முன்,மிகப்பெரிய கடப்பாடு காத்திருக்கிறது. இனிவரும் தலைமுறை, அந்நிலை நோக்கி நகர்வது, காலத்தின் தேவை என்று உணர்வோமாக.இந்தத் தடத்தில் முத்தொள்ளாயிரம் செவ்வியல் நூற்றொகையில் சேர்க்கப்பட்டது குறித்து இக்கட்டுரை ஆய்கிறது.

**முத்தொள்ளாயிரம் சில பொதுப்பார்வைகள்:**

"முச்சங்கம், மூவேந்தர், மும்முரசு, முக்கொடி, முக்குடை என மூன்று மூன்றாகச் சிறப்பிக்கப்படும் முத்தமிழின் சிறப்புக்குப் பொலிவூட்டும் சொற்சித்திரமாக, முத்தொள்ளாயிரம் திகழ்வதோடு, வெண்பாவிற்கோர் புகழேந்தி என்ற பாராட்டுக்கு மேலான பெருமைபெறத்தக்க புலவராக, இந்நூலாசிரியர் திகழ்கிறார் என்பதை மெய்ப்பிக்கின்றது. பாடல்கள் ஒவ்வொன்றிலும் நடமிடும் தாளக்கட்டும் சந்தலயமும் பாடல்களில் ஒரு நாட்டிய நாடகத்தையே நிகழ்த்திக் காட்டுகின்றன" என்றுவிதந்தோதிச் செல்கிறார், ஞா. மாணிக்கவாசகன்.

ஜெர்மனி நாட்டு கொலோன் பல்கலைக்கழகத்தில், தெற்காசிய மொழிகள் துறைப் பேராசிரியர் உல்ரிச்என்ரிக்கொ நிக்கோலஸ் என்பாரால், முத்தொள்ளாயிரம் முனைவர் பட்ட ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது என்பது, இங்கு பதியத்தக்கது. அவரால் முத்தொள்ளாயிரம்மொழிபெயர்க்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

முத்தொள்ளாயிரம் மொத்தம் இரண்டாயிரத்து எழுநூறுபாடல்கள் என்று பொதுவாகவும், அவற்றுள் இப்போது கிடைத்துள்ளவை 99என்று சிலரும், 108என்று சிலரும், 130என்று சிலரும், எண்ணிக்கை

தருவதில் வேறுபாடுகள் உள்ளன.முத்தொள்ளாயிரச் செய்யுள்களில் 25 ல் 1 பங்கு மட்டுமே கிடைத்துள்ளன என்று கூறப்படுவது நோக்கக்தக்கது.

- **ஊரோடு தோற்றம் உரித்தெனமொழிப**
- **ஆனை ஆயிரம் அமரிடைவென்ற**

**மாணவனுக்கு வகுப்பது பரணி**

போன்ற நூற்பாக்கள் வரையறுக்கும் உலா, பரணி மற்றும் தூது போன்ற, சிற்றிலக்கியங்களின் விளைச்சலுக்கும் முத்தொள்ளாயிரம் வித்தாக இருந்துள்ளதைப் பார்க்கிறோம்.

சில பாடல்கள் கலிங்கத்துப் பரணியின் கடைத்திறப்பையும் இன்னபிற பகுதிகளையும் நினைவுறுத்துவதுபோல, பின்னாளில் அவைஉருவாக முன்னோடியாகவும், சில பாடல்கள் உலா இலக்கிய முன்னோடியாகவும், சில பாடல்கள் தூது இலக்கிய முன்னோடியாகவும் கொள்ளமுடியும்.

'முட்டுவேன் கொல் தாக்குவேன்கொல்' எனும் ஔவையின்பாடல் 'ஆடுகோ ஆடுகோ ஐதாக் கலந்து கொண்டு ஏடுகோடாக எழுதுகோ' என முத்தொள்ளாயிரத்திலும், 'முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்' எனும் சங்கப்பாட்டின் உட்கிடக்கை, குங்கும ஈர்ஞ்சாந்தின் சேறு இருக்கி' என முத்தொள்ளாயிரத்திலும்; ஒத்திருக்கிறது எனலாம்.

பாற்றினம் ஆர்ப்ப பருந்து வழிப்படர
நால்திசையும் ஓடி நரி கதிப்ப- ஆற்றின்
அலங்கலம் பேய் மகளிர் ஆட வருமே
இலங்கிலை வேல் கிள்ளி களிறு

என்ற பாடல், நரிகள் பரபரப்போடு உலவ, பேய்கள் நடனமிட உடன் வந்து கழுகினங்கள் கூச்சலிட, வேல் ஏந்திய சோழனது களிறு பொலிகிறது எனக்காட்சிப்படுத்தும் இப்பாட்டை, நயம்படவிளக்கவந்தடிகே.சிஎழுதுவார் : டார்வின் ஆராய்ச்சிக்காக தென் அமெரிக்கா செல்லத் திட்டமிட்டுப் பெருங்குழுவாகப் போனபோது , கப்பலுக்கு மேலாக கூட்டமாகக் கழுகுகளும் வந்தனவாம். அங்கிருப்பவர்களைக் கேட்டபோது, முன்பெல்லாம் நாங்கள் கூட்டமாகப் போனாலே போருக்குத்தான் போவோம். அப்போதும் கழுகுகள் கூட்டங் கூட்டமாய் வட்டமிடும். அதுபோல நினைத்து இப்போதும் வரக்கூடும் என்றார்களாம். விலங்கின நடத்தை உளவியல் பொருத்தத்தை இங்கு, டி.கே.சி பதிகிறார்.

சூழலியல் கண்ணோட்டமும் ஒட்டடை அடித்ததால் கூட்டையிழந்த சிலந்திக்கு இரங்கத்தக்க பார்வையும் கொண்டிலங்குகிறது முத்தொள்ளாயிரத்தின் இந்தப்பாடல்:

அந்தணர் ஆவோடு பொன்பெற்றார் நாவலர்
மந்தரம் போல் மாண்ட களிறூர்ந்தார்-எந்தை
இலங்கிலைவேல் கிள்ளி இரேவதிநாள் என்னோ
சிலம்பி தன் கூடிழந்த ஆறு (85)

வேரறுகை - ஆனை அறுகம்புல், ஊனாக்கொடி போன்ற தாவரவியல் சார் அரிதான சொல்லாடல்கள் இடம்பெறும் பாடல்களும் கணக்கில் கொள்ளவேண்டியன.

ஆனால் பதிப்பில், நெல்லைப்பேச்சுத்தமிழ் தாக்கத்தால் டி.கே.சிவலிந்து ஒற்றிடுகிற போக்கைக் குறிப்பிடவேண்டும். (பொன் உரைகல்ப் போன்ற, நீல அலையில்க் கயல்போல்,கள்ளார்தோள்க்கிள்ளி,வேல்க்கண்ணாய்,கார்க்கடல்க்கொற்கையார், அயில்க்கதவம்,எயில்க்கதவம் இப்படி அடுக்கிக்கொண்டே செல்லலாம்.

**சங்கச்செவ்வியல் அழகியலும் மரபுமீறலும்**

தன்னுறுவேட்கை கிழவன் முற்கிளத்தல்
எண்ணுங்காலைக் கிழத்திக்கு இல்லை (தொல்.பொரு.116)

என தொல்காப்பியப் பொருளதிகார நூற்பாவின்படி , தன் காதலுணர்வை, பெண் நேரடியாக வெளிப்படுத்த உரிமையில்லை. ஒரு வேளை அப்படி வெளிப்படுத்த நேர்ந்தாலும்,

பிறநீர் மாக்களின் அறிய ஆயிடைப்
பெய்நீர் போலும் உணர்விற் றென்ப (தொல்.பொரு.116)

என்கிற அடிப்படையில், மண்கலத்தில் உள்ள நீர், மெல்லக் கசிந்து வெளியில் தெரியாமல் பரவுவதைப்போல, வெளிப்பட வேண்டும் பெண்ணின் காதல் என்கிறது, தொல்காப்பியம். இது அக்கால வழக்கமெனினும் இக்கால மானுட வளர்ச்சிப்போக்கில், பெண்ணியக் கோட்பாடுகள் வளர்ந்து, பார்வைகள் சீர்மை பெற்றுள்ள சமகாலத்தில், மிகமுரணானதும் பிற்போக்கானதுமாகத் தோன்றும். ஆனாலும் இது அக்காலகட்டத்தையொட்டிப்பார்க்கப்படவேண்டிய மரபு.

தமிழ்க்காந்தருவத் திருமணம், வடமரபு காந்தருவத்திலிருந்தும் மிக மாறுபட்டதென்கிறார் ந.சுப்புரெட்டியார். எண்வகைத் திருமணங்களில் சாலச்சிறந்தது; புலால் நாறும் நெய்தல் தலைவியை வேளாண் உற்பத்தி கொண்ட மருதத் தலைவன் இயல்பாக ஏற்றுக்கொள்ளும் அப்பழுக்கற்றது;

திணைகளுக்கிடையே கொள்வினை கொடுப்பினைகளில்ஏற்றத்தாழ்வு அற்றது; மணக்கொடை, மாமுதுபார்ப்பான் மறைவழி காட்டல் எதுவுமற்ற மிகமிக முற்போக்குப் பாத்திரம் கொண்டது; அறத்தொடு நின்று காதலாகிக் கசிந்துருகுவது, தமிழ்க் காந்தருவம் எனலாம். அப்படிப்பட்ட காலத்தில் பெண்ணானவள், காதல் சார் மெய்ப்பாட்டைகரவு மெய்ப்பாடாகக் காட்ட வலியுறுத்துவதுதான் முரணானது.

இந்த வகையில், பிற செவ்வியல் இலக்கியங்களின் இயங்குதளம் பெண், காதலை வெளிப்படையாகப் புலப்படுத்தமுடியாத நிலை இருக்கையில், முத்தொள்ளாயிரம் அப்படிப் புலப்படுத்திஇருப்பதைக் கவனம் கொண்டால்,ஒருபுறம் இக்காலச் சனநாயக அடிப்படையில் ஏற்புடையதே.எனினும்,இன்னொருபுறம் அக்கால மரபுப்படி,கரவுமெய்ப்பாடு தவிர்க்கப்பட்டிருப்பதால் முத்தொள்ளாயிரம் பிற்காலத்தைச் சேர்ந்தது எனும் முடிவுக்கும் வரவேண்டியுள்ளது.

ஆனால், இத்தகைய இலக்கணங்களைக் கட்டறுத்துமுன்னமே செவ்வியல் கால வெள்ளிவீதியார், ஔவையார் பாடல்கள் விதிவிலக்காக வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றன.

ஞாயிறுகாயும் வெவ்வறை மருங்கில்
கையில் ஊமன் கண்ணில் காக்கும்
வெண்ணெய் உணங்கல்போல
பரந்தன்று இந்நோய் நோன்றுகொளற்குஅரிதே(குறு 58)

நும்மோடு நக்க வால்வெள் எயிறே (குறு 386)

ஆதிமந்தி போல பேதுற்று
அலைந்தனென் உழல் வென் கொல்லோ (அகம் 45)

கன்றும் உண்ணாது கலத்தினும் படாது
நல்ஆன் தீம்பால் நிலத்து உக்கா அங்கு
எனக்கும் ஆகாது என் ஐக்கும் உதவாது
திதலை அல்குல் என் மாமைக் கவினே (குறு 9)

யாமம் உய்யாமை நின்றது

காமம் பெரிதே கலைஞரோ இலரே ! (நற் 335)
அரிதோ தானே நாணே நம்மொடு
காமம் நெரிதரக் கைந் நில்லாதே (குறு 149)
காலே பரிதப் பினவே கண்ணே
நோக்கி நோக்கி வாள் இழந்தனவே (குறு 44)

இவ்வாறாக வெள்ளிவீதியார் இயற்றிய, சிலபாடல்கள் ‘தன்னுறுவேட்கை கிழவன் முன் கிளத்தல் எண்ணுங்காலைக் கிழத்திக்கில்லை’ என்கிற இலக்கணத்தை மீறியவை. காமம் குறித்த நாணம்கடத்தலை, விழைவை, புலம்பலை வெளிப்படுத்துபவை.

போலவே, ஔவையும் இப்படி இலக்கண மரபுகளை மீறுகிற இடங்களைக் காணலாம்.

முட்டுவென்கொல் தாக்குவேன்கொல்
ஒரேன்யானும் ஓர் பெற்றிமேலிட்டு
ஆ ஒல்லெனக் கூவுவேன் கொல்
அலமரல் அசைவளி அலைப்ப என்
உயவு நோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே (குறு 28)

முலையிடைத் தோன்றிய நோய் வளர் இளமுலை
அசைவுரை நெஞ்சத்து உயவுத்திறல் நீடி
ஊரோர் எடுத்த அம்பல் அம்சினை
ஆராக் காதல் அவிர்தளிர் பரப்பி
புலவர் புகழ்ந்த நாணில் பெருமரம்
நிலவரை எல்லாம் நிழற்றி
அல் அரும்பு ஊழ்ப்பவும் வாரா தோரே (அகம் 273)

உள்ளின் உள்ளம் வேமே உள்ளாது
இருப்பின் எம் அளைவேத்து அன்றே வருத்தி
வான்தோய் வற்றே காமம்
சான்றோர் அல்லர் யாம்மரீஇ யோதே (குறு 99)

இளநலம் இற்கடை ஒழியச்

சேறும் வாழியோ முதிர்கம் யாமே (நற் 295)

போன்ற பாடல்களில் உணரமுடியும்.அதேவேளை சங்கச்செவ்வியல் இலக்கியப் பெரும்பரப்பில் இவை விதிவிலக்கும் சிறுபான்மையும் எனக் கணிக்கவும்வேண்டியிருக்கிறது.

**முத்தொள்ளாயிரமும் சங்கச்செவ்வியல் அழகியல் மரபு மீறலும்**

வேம்புதலையாத்த நோன்காழ் எஃகம் என்றவாறு, வேம்பு வந்ததாலேயே, சுட்டி ஒருவர் பெயர்கொளப்பெறார் எனும் பண்டை அக மரபுப்படி, இப்பாடலை புறத்தில்தான் வகைப்படுத்த வேண்டும் எனும் உரையாடல் இருந்ததைப்போல்,முத்தொள்ளாயிரச் செய்யுள்கள் அகமரபை மீறியே துலங்குகின்றன.

கிள்ளி, கூடல் கோமான், மாறன்,கோதை,கோலியர் கோன் சேரன், தென்னவன்,மதுரையார் கோமான், வளவன்,வழுதி, மாந்தையார் மாக்கடுங்கோ, தென் கொற்கைக் கோமான், பெருந்தண் உறையார்கோ,அலங்குதார்ச் செம்பியன்,நெடுவேள் நலங்கிள்ளி எனச்சுட்டியோ, ஒருவர் பெயர்விளித்தோ பாடப்பட்டிருப்பதுகவனிக்கத்தக்கது.

செவ்வியல்தமிழ் மரபு மீறலாக, மகளிர் காதல் என்பதும், பெண்குரல் வழி வெளிப்படுத்தப்படுவது என்பதும், முத்தொள்ளாயிர உள்ளடக்கத்தின் மாறுபட்டுக் காணப்படும்ஒரு போக்காகும். இது கருதியும், முத்தொள்ளாயிரம் செவ்வியல் கால நூலா? பிந்தைய கால நூலா? என்ற கேள்வி எழுகிறது.

கொம்பன்னார் காமம், கலவிகளி மயங்கிக்காணேன், தண்டப்படுப தடமென் தோள் ,என் நெஞ்சும் நாணும் நலனும் இவையெல்லாம் மன்னன் புனல் நாடன் வவ்வினான், தொழுதேனைத் தோள் நலமும் கொண்டான் , கனவில் வந்து என்னை அளியான் , என் கண் புகுந்தான் இரா , என்பெண்மை படாஆறே , மாறன் தன் மார்பம் கதவம் கொண்டுயாமும் தொழ , கோட்டு மண் கொள்ள முலை , என்றேல்லாம் வருகிற கூற்றுகளை வைத்து, இப்பாடல்களும் இன்னும் சிலவும் பெண்பாற்புலவரால் இயற்றப்பட்டிருத்தல் வேண்டுமென்பது பொதுவான ஒரு ஆய்வுக் கண்ணோட்டமாக, அமைகிறது.

இதனை யாத்த புலவர் பெயர் விவரம் கிடைக்காத்தால், ஒருவேளை ‘ஆண் எழுத்துப் பெண்குரலாக சில அமைந்திருக்குமோ என எண்ணினாலும், பெரும்பாலும் பெண் எழுத்துப் பெண்குரலாகவே அமைந்தன போலவே,இப் பாடல்கள் தோற்றமளிக்கின்றன. ஆக, மகளிர்காதல் இங்கு செவ்வியல் தமிழ் மரபுமீறலாகத் தொடங்கி, (வெள்ளிவீதி , ஔவை, முத்தொள்ளாயிரப் பெண்பாற்புலவர்) இன்றைய காலப்

பெண்ணியலாளர் கவிகள் வரை, ஒரு நீட்சிப் போக்கைக் காணலாம்.முத்தொள்ளாயிரத்தின் காலத்துக்கு முந்தைய, சங்கக் கவிதைகளில் ஆங்காங்கே சிறுபான்மையாகக் காணப்படும் காமம் சார்ந்த பெண்ணின் வெளிப்படையான குரல்கள், முத்தொள்ளாயிரத்தில் தீவிரங்கொள்வதைக் காண்கிறோம்.

புறப்புறம் என்றோ கைக்கிளைப் பாடாண்திணை என்றோ சொல்லப்பட்டாலும் செவ்வியல்காலத்துக்கு பிற்காலத்தெழுந்தது முத்தொள்ளாயிரம் என்பதைச் சிந்திக்கையில் சில கருதுகோள்கள் முன்வருகின்றன.

“தொல்காப்பிய உரையாசிரியர் பேராசிரியர், பதினெண்கீழ்க்கணக்கு நூலாசிரியர்களோடு முத்தொள்ளாயிரத்தின் ஆசிரியரையும் சேர்த்துப் பிற சான்றோர் எனக் குறிப்பிட்டார். எனவே இவர் சங்கப் புலவர் அல்லர் என்பது வெளிப்படையாகும். ஆராய்ச்சி அறிஞர் தி.வை. சதாசிவப் பண்டாரத்தார், இந்நூலின் உள்ள சில அகச் சான்றுகளை எடுத்துக்காட்டி, இந்நூலாசிரியரை கி.பி. 5ஆம் நூற்றாண்டை ஒட்டிய காலத்தவர் என்கின்றார்.

முத்தொள்ளாயிரத்தின் கால வரையறை மற்றும் பாடல் எண்ணிக்கையில் ஆய்வாளர்களிடையே பல்வேறு கருத்து வேறுபாடு உண்டு. இதனைப் பல்வேறு அறிஞர்கள் பலரும் பல்வேறு தரப்பில் உரைக்கின்றனர்.

| | |
|---|---|
| கா.கோ. வேங்கடராமன் | -கி.பி.5ஆம்நூற்றாண்டு |
| வையாபுரிப்பிள்ளை | -கி.பி.9ஆம்நூற்றாண்டு |
| வி. செல்வநாயகம் | -கி.பி.6ஆம்நூற்றாண்டு |
| நாராயண வேலுப்பிள்ளை | -கி.பி. 5ஆம் நூற்றாண்டு |

என இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் முத்தொள்ளாயிரக் காலத்தைக் குறிப்பிடுகின்றனர்.

முத்தொள்ளாயிரம் , கைக்கிளைமாலை(சிற்றிலக்கிய)வகை தனி இலக்கிய வகைமையாக ஏன் இருக்கக்கூடாது?

இரங்க வருவது மயங்கிய வொருதலை
யியைந்த நெறியது கைக்கிளைமாலை

என்று இலக்கணம் கூறுமிடம் இங்கு கவனிப்புக்குரியது.ஆண்பாற் கைக்கிளை, பெண்பாற்கைக்கிளை – இப்படிப் பிற்கால வடிவக்கூறுகள் விவாதப்புள்ளியில் தட்டுப்படுவதைத் தவிர்க்க

முடியவில்லை.சிற்றிலக்கியத் தாக்கம் மிகுந்த காலத்தெழுந்த இலக்கிய ஆக்கமாக இருக்கலாம். சிற்றிலக்கியக்கூறுகள் மிக்குக் காணப்படுவது பிற்காலத்தைச் சேர்ந்தது எனச்சுட்ட வாய்ப்பளிப்பதாயிருக்கிறது.

“வச்சத்தொள்ளாயிரமும்ஒட்டக்கூத்தர் எழுதிய அரும்பைத் தொள்ளாயிரமும் இம் முத்தொள்ளாயிர நெறியே தழுவியுரைக்கப்பட்டனவாமென ஊகிக்கப்படுகின்றன” என்று ரா.ராகவையங்கார் கருத்தையொட்டி யோசிக்கையில்,வச்சத்தொள்ளாயிரம்அரும்பைத்தொள்ளாயிரம் ஆகியனவற்றோடுமுத்தொள்ளாயிரமும் செவ்வியல் காலத்துக்கு மிகப்பிற்பட்டகாலப்படைப்பு என சிந்திக்கலாம். இ.காளீஸ்வரி பெயர்சுட்டா மரபு வீழ்ந்தது எனக்குறிப்பிடுவதிலிருந்து மரபுநிலைவழுவிய பிந்தைய காலகட்டத்தைச் சேர்ந்தது எனக்கருதிப் பார்க்கலாம். பெயர்சுட்டா மரபு மாறினாலும் முற்றிலும் பாடாண் புறப்புறத்திணை வகை என்று ரா.ராகவையங்கார் வரையறுத்தாலும் நேரடிப்பெயர்கள் தவிர்க்கப்பட்டு குலப்பெயர்களே சுட்டப்பட்டிருப்பதால் காலகட்டத்தைத் துல்லியமாகக் கணிப்பதில் இடர்ப்பட வேண்டியிருக்கிறது. தவிரவும் இப்படி, தலைவன் வருகையில் அவனைக்கண்ணாரக்கண்டு காதல்மயக்குறுவது உலா எனும் சிற்றிலக்கிய அடிப்படை என்பதால், சிற்றிலக்கியக் காலப்படைப்பாக்கம் என்று ஒரு கருதுகோளும் இங்கு கூர்மைப்படுகிறது.

“இந்நூலின் ஆசிரியரைக்குறித்து இரண்டொரு குறிப்புகளே கிடைக்கின்றன. மன்னிய நான்மீன் என்னும் கடவுள்வாழ்த்தினாலும் புகழ் என்ற அதிகாரத்துள் வரும் மடங்கா மயிலூர்தி, செங்கணெடியான் மேல் என்று தொடங்கும் செய்யுட்களாலும் இவர் சைவசமயத்தினாரதல் வேண்டும்.” என பதிப்புகள் தெரிவிக்கும்படி, சைவசமயச்சார்பு கருதிப்பார்க்கிறபோது, பிற்கால ஆக்கம் என கருத்துருவாகலாம்.பேராசிரியர் இவரைப் பிற சான்றோருள் வைத்து என்னுகின்றமையால் சங்கத்துச் சான்றோர்கட்குப் பிற்பட்ட காலத்தில் வாழ்ந்தவரென்பதும் புலனாம்” என வையாபுரிப்பிள்ளை குறிப்பிடுவது இங்குகவனிக்கத்தக்கது”.

தொகை நூல்களில் வரலாற்றையும், பிறமொழித் தொகை நூல்களின் போக்குகளையும் சுட்டி,புறத்திரட்டுநூலுக்கு வையாபுரிப்பிள்ளைஎழுதியுள்ள ஆழமும் விரிவும் கொண்டபதிப்புரை செவ்வியல்காலத்தொகை நூல்களுக்கும் பிற்காலத் தொகை நூல்களுக்கும் அடிப்படை வேறுபாட்டைச் சுட்டுமிடம் கவனிப்புக்குரியது. அந்தப்பதிப்புரையைப் படிக்கையில் சமயச்சார்பற்ற தொகை நூலாக்கம், சமயச்சார்புத் தொகை நூலாக்கம் என கோடு கிழித்துப் பார்க்கவேண்டிய அவசியம் உணரப்படவேண்டும்

எனத்தோன்றுகிறது.எல்லா நூல்களையும் வரம்பின்றி விதந்தோதும் போக்கை charlatanism(போலிப்புலமை) என்ற சொல்லால் குறித்துக்காட்டுவார், மத்தேயு ஆர்னால்டு எனும் மேலைக்கவி என்கிறார், வையாபுரிப்பிள்ளை. எனவே தொகையாக்கத்திலும் உணர்ச்சி நிலையில் அணுகாது உணர்வு நிலையில் அணுகுவதே சரியாக இருக்கும்.

இவ்வாறாகச் செவ்வியல் காலத்துக்குப் பின் வந்தது, முத்தொள்ளாயிரம் என்பதற்கான சான்றுகளைச் சுருக்கித் தொகுத்துக்கொள்ளலாம்:

1. மிக வெளிப்படையாகவும் துலக்கமாகவும் பெண் காமத்தைப் புலப்படுத்தத் தயங்காமை…
2. செவ்வியல்கால சிறுபான்மைக்கைக்கிளை முத்தொள்ளாயிரத்துள் பெரும்பான்மையாக அமைவது…
3. பின்னர் வந்த சிற்றிலக்கியங்களுக்குக் கால்கோளிடுவது…

   (பிற்காலச் சிற்றிலக்கியங்களுக்கும் முத்தொள்ளாயிரத்துக்குமான காலதூரம் மிகக்குறைவாயிருக்கலாம் எனும் கருதுகோள்- ஆக, காலத்தால் மிகப் பிற்பட்டது )
4. வெறுமனே மன்னர்மயப்பட்ட மாண்புகளும் மன்னர் மீதான காதலும் (கைக்கிளைக் காதலும்) என, சங்கச்செவ்வியல்மரபு சுருங்கிய நிலையில் இயக்கங்கொள்வது…
5. ஆறில் ஒன்றன்றோ புரவலர் கொள்ளும் பொருள் எனும் பாடலில் (ஆறில் ஒரு பங்கு வரி என டி.கே.சி குறிக்கும் உரை) வரி சங்கச்செவ்வியல் காலத்தைச் சுட்டாது, பிற்காலத்தையே சுட்டுமாப்போல அமைவது.. விளைச்சலில் ஆறில் ஒரு பங்கு வரியாக வாங்கப்பட்டது என்ற கருத்து பரவலாகக் கூறப்படுகிறது.ஆனால் சங்க இலக்கியங்களில் இதற்குச்சான்று எதுவுமில்லை.(ஆ.சிவசுப்பிரமணியன், கீற்று.காம்,11 ஆகஸ்ட் 2011)
6. பாதீடும் உண்டாட்டுமே நமது செவ்வியல் மரபு.ஆனால் அந்தணர் ஆவோடு பொன்பெற்றார் என்றபாடற்குறிப்பு மூலம் இது, பிற்காலத்தியவழ்வியல் செயன்மையைக் குறித்துக்காட்டி நிற்கிறது.

   இப்படிப் பல்லாற்றானும், முத்தொள்ளாயிரம் காலத்தால் பிந்தைய பல பாவடிவங்களுக்கும், பாடுபொருள்களுக்கும் முன்னத்து ஏராய் விளங்கினாலும்,அதன் அழகியல், சங்கச்செவ்வியல் காலத்தின் பொருண்மைகள் சுருங்கி, பிந்தைய காலத்தின் பிரதியாக அமைந்தவாறு,முத்தொள்ளாயிரத்தைச் செவ்வியல் நூற்றொகையில் அடக்கமுடியுமா எனும் செம்மாந்த கேள்வி காத்திரமாக எழுகிறது.

**உசாத்துணை:**

[1] ராகவையங்கார்.ரா, முத்தொள்ளாயிரம், செந்தமிழ்ப்பிரசுரம், மதுரைத்தமிழ்ச்சங்க முத்திராசாலை,1935.

[2] டி.கே.சிதம்பரநாதர், முத்தொள்ளாயிரம்,பாரி நிலையம், சென்னை, 1943

[3] சபாஜெயராசா,அழகியல், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் ,இலங்கை,1989

[4] ஆவ்னர் சிஸ் , (மொ.பெ:பொன்னீலன்) மார்க்சிய அழகியலின் அடிப்படைகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

[5] சபா ஜெயராசா, மார்க்சிய உளவியலும் அழகியலும், இலங்கை முற்போக்குக் கலை இலக்கிய மன்றம் வெளியீடு , இலங்கை , 21-03-2010

[6] தெட்சணாமூர்த்தி.அ,இலக்கியவரலாறு, தமிழ்இணையக் கல்விக்கழகம், சென்னை.

[7] மாணிக்கவாசகன், முத்தொள்ளாயிர விளக்கவுரை, உமா பதிப்பகம்,சென்னை,2016,

[8] இளங்கோ. நா, முத்தொள்ளாயிரம் சில குறிப்புகள், வலைப்பூ பதிவு

[9] முனைவர் கே.எஸ்.கோபிநாத் உரையாடல், நாள்: 08-03-2021

[10] காளீஸ்வரி.இ, செந்தமிழ் இதழ் ,மதுரை, அக்டோபர் 2014

[11] வையாபுரிப்பிள்ளை, புறத்திரட்டு, சென்னைப்பல்கலைக் கழகம், முதல் பதிப்பு 1938

[12] மணிவேல்.மு, கைக்கிளைக்காதல்,மதுரை காமராசர் பல்கலைக்கழக வெளியீடு,1992

[13] ஆ.சிவசுப்பிரமணியன், கீற்று.காம்,11 ஆகஸ்ட் 2011